TNGCC
Tamil Nadu Green Climate Company
Department of Environment and Climate Change
முதலமைச்சரின் பசுமை நல்கை திட்டம் தொடக்கம்
LAUNCH OF CHIEF MINISTER'S GREEN FELLOWSHIP
பசுமை தமிழகம்
Green Tamil Nadu Mission

காலநிலை மாற்றம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த பசுமை புத்தாய்வு திட்டம்

மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை, ஆக.22–

காலநிலை மாற்றம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பசுமை புத்தாய்வு திட்டத்தை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்கும், மாவட்டங்களின் பசுமைக் கனவுகளை நிறைவேற்ற உதவுவதற்கும், முதலமைச்சரின் பசுமை புத்தாய்வு திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தை செயல்படுத்த அண்ணா பல்கலைக்கழகத்தின் அறிவாற்றல் ஆய்வு நிறுவனத்தால் தேர்வு செய்யப்பட்ட 40 பசுமை தோழர்கள், முதலமைச்சரை சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்த திட்டம், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் கீழ் செயல்படும். அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆற்றல் கல்விகளுக்கான நிறுவனம், இத்திட்டத்திற்கான அறிவுசார் பங்குதாரராக செயல்படும். ஒரு திட்டத் தலைவர் மற்றும் 40 பசுமைத் தோழர்கள், 4 ஆராய்ச்சி இணையாளர்கள் ஆகியோர் தகுதியின் அடிப்படையில், அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆற்றல் கல்விகளுக்கான நிறுவனம் மூலமாக இத்திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்டு உள்ளனர்.

தமிழ்நாட்டை இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு தலைமை தாங்கும் விதமாக சுற்றுச்சூழல் ரீதியாக முன்னேறிய மாநிலமாக மாற்றுவது, சுற்றுச்சூழல்சார் கொள்கைகள் வடிவமைப்பு, செயலாக்கம் மற்றும் நிர்வாகத்தில் உறுதி மிக்க இளைஞர்களை ஈடுபடுத்துதல், சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீவிர ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுகளின் மூலம் அறிவு களஞ்சியத்தை உருவாக்குதல் போன்றவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

பசுமைத் தோழர்கள் தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட நிர்வாகங்களின் சுற்றுச்சூழல் முன்னெடுப்புகளுக்கு உறுதுணையாக முக்கிய பங்காற்றுவார்கள். முக்கிய அரசு திட்டங்களின் செயலாக்கத்திற்கு பசுமை தோழர்கள் துணை புரிவர். சிறப்பான சுற்றுச்சூழல் சேவைகளை வழங்குதல் மற்றும் மீண்டும் மஞ்சப்பை போன்ற சூழல்சார் மாற்றுப் பொருட்களின் பயன்பாடுகளை ஊக்குவித்தல் போன்ற சேவைகளை ஆற்றுவார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பசுமைத் தோழர்கள் 2 ஆண்டுகளுக்கு சேவையாற்றுவர். இக்காலகட்டத்தில், அவர்களுக்கு உதவித் தொகையாக மாதந்தோறும் ரூ.60 ஆயிரம் வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற அவர்களுக்கு மடிக்கணினியும் வழங்கப்படும். அவர்களின் திறன் மேம்பாட்டிற்கான பயிற்சி வகுப்புகள், பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புகளும் வழங்கப்படும்.

பசுமைத் தோழர்கள், 2 ஆண்டு சேவையின் முடிவில் அண்ணா பல்கலைக் கழகத்திடம் இருந்து ''கால நிலை மாற்றம் மற்றும் நிலைத்தன்மை'' என்ற முதுகலை பட்டயப் படிப்பிற்கான பட்டத்தையும் பெறுவார்கள்.

இந்த நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் மெய்யநாதன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் இயக்குனர் தீபக் பில்கி மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையம் அமைப்பு: தலைவராக ஐ.ஏ.எஸ். அதிகாரி நசிமுதீன் நியமனம்

ஆன்லைன் விளையாட்டு நிறுவனங்களின் செயல்பாடுகளை பராமரிக்கும்

சென்னை, ஆக.22

ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி நசிமுதீனை தலைவராக கொண்டு தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையத்தை அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டு உள்ளது.

தமிழ்நாடு இணையவழி சூதாட்ட தடை மற்றும் இணையவழி விளையாட்டுக்கள் ஒழுங்குபடுத்தும் சட்டம் சமீபத்தில் இயற்றப்பட்டு உள்ளது. தமிழகத்தில் தடை செய்யப்பட்டு இருந்தாலும், இணையவழி விளையாட்டுக்களுக்கு 28 சதவீத ஜி.எஸ்.டி. வரியை மத்திய அரசு விதித்துள்ளது. இதற்கு ஏற்கனவே தமிழக அரசு ஆட்சேபனை தெரிவித்து இருந்தது.

இணையவழி சூதாட்டமான இணையவழி பந்தயம், பணம் அல்லது பிற ஆதாயங்கள் கிடைக்க வாய்ப்புள்ள இணையவழி விளையாட்டுகள் மற்றும் குறிப்பிட்ட வாய்ப்புள்ள இணையவழி விளையாட்டுகள் ஏற்கனவே தடை செய்யப்பட்டு, தமிழ்நாட்டில் தண்டனைக்குரிய குற்றங்களாக கருதப்படுவதால், ஜி.எஸ்.டி. வரி விதிப்பு தொடர்பான சட்ட திருத்தங்களை தமிழக தடை சட்டங்களுக்கு இணக்கமான முறையில் அமைக்க வேண்டும் என்று ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில் நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தி இருந்தார்.

ஆணையம் அமைப்பு

இந்த நிலையில் தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையத்தை அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டு உள்ளது. இதுதொடர்பாக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள தமிழக உள்துறை முதன்மை செயலாளர் அமுதாவின் உத்தரவில் கூறப்பட்டு இருப்பதாவது:

தமிழ்நாட்டில் தமிழ்நாடு இணையவழி சூதாட்ட தடை மற்றும் இணையவழி விளையாட்டுகள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையத்தை அமைத்து அரசு உத்தரவிடுகிறது. அந்த ஆணையத்தின் தலைவராக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி நசிமுதீன் செயல்படுவார்.

ஓய்வு பெற்ற ஐ.பி.எஸ். அதிகாரி சாரங்கன், கிண்டி பொறியியல் கல்லூரியின் ஓய்வு பெற்ற பேராசிரியர் செல்லப்பன், போரூர் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவ கல்லூரியின் ஓய்வு பெற்ற மருத்துவம் சார்ந்த உளவியல் அறிஞர் ரவீந்திரன், 'இன் கேங்' குழும நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி விஜய் கருணாகரன் ஆகியோர் அதன் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆணையத்தின் பணிகள் குறித்து ஏற்கனவே தமிழ்நாடு இணையவழி சூதாட்ட தடை மற்றும் இணையவழி விளையாட்டுகள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அதன்படி, திறமை அல்லாத மற்றும் பணம் அல்லது பிற ஆதாயங்கள் கிடைக்க வாய்ப்புள்ள இணையவழி விளையாட்டுகள் எவை எவை? என்பதை கண்டறிந்து, அரசுக்கு அதுபற்றிய பரிந்துரையை இந்த ஆணையம் அளிக்கும்.

உள்ளூர் ஆன்லைன் விளையாட்டு களுக்கான சான்றிதழை இந்த ஆணையம் வழங்கும். ஆன்லைன் விளையாட்டுகளுக்கான நேரத்தின் அளவு, பயன்களின் அளவு, வயது கட்டுப்பாடு ஆகியவற்றை ஆணையம் வகுத்தளிக்கும்.

ஆன்லைன் விளையாட்டுகளை அளிக்கும் நிறுவனங்களின் செயல்பாடுகள் பற்றிய தரவுகளை சேகரித்து அவற்றை ஆணையம் பராமரிக்கும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

கருணாநிதி நூற்றாண்டு நினைவாக மாவட்டத்திற்கு ஒரு நினைவுச்சின்னம்: ஸ்டாலின் உத்தரவு

சென்னை, ஆக.22–

கருணாநிதி நூற்றாண்டை நினைவுகூரும் வகையில் மாவட்டத்திற்கு ஒரு நினைவுச்சின்னம் அமைக்க வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

கருணாநிதியின் நூற்றாண்டு விழா மாநிலம் முழுவதும் தமிழக அரசால் கொண்டாடப்பட்டு வருகிறது. அவரை பெருமைப்படுத்தும் விழாக்களாக மட்டுமல்லாமல், அவர் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக அறிவித்து நிறைவேற்றிய திட்டங்களை இளைய சமுதாயத்தினர் அறிந்து கொள்ளும் வகையிலும், இந்த விழாக்கள் அமைய வேண்டும் என்ற எண்ணத்தில் பெரிய அளவிலான ஆடம்பர நிகழ்ச்சிகளாக அல்லாமல் அனைத்து தரப்பினரும் பங்கெடுக்கும் நிகழ்ச்சிகளாக அவற்றை நடத்த வேண்டும் என்று முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

இந்த நிலையில் சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடுவது குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், அவரது நூற்றாண்டை நினைவுகூரும் வகையில் மாவட்டத்திற்கு ஒரு நினைவுச்சின்னம் அமைக்க வேண்டும் என்றும், கோவையில் கலைஞர் செம்மொழி பூங்காவிற்கும், சென்னையில் கலைஞர் பன்னாட்டு அரங்கத்திற்கும் விரைவில் அடிக்கல் நாட்ட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும், நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளை குறிப்பிட்ட காலத்தில் நடத்த வேண்டும் என்றும் முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

மேலும் அவர், நிகழ்ச்சிகள் அனைத்திலும் பொதுமக்கள், மாணவர்கள், இளைஞர்கள் பங்கேற்பு அதிகம் இருக்க வேண்டும். தமிழ்நாட்டிற்கு கருணாநிதி ஆற்றிய பங்கின் மூலமாக நாட்டிற்கு அவர் எப்படி புகழ் சேர்த்தார் என்பது குறித்தும், அனைவரும் பயன்படுத்திடும் வகையில் கருணாநிதி பற்றிய 100 பக்க வரலாறு வெளியிட்டு, அவற்றை இலவசமாக பொதுமக்களுக்கு வழங்க வேண்டும். இன்றைய இளைய தலைமுறையிடம் கருணாநிதியின் ஆளுமையை வெளிப்படுத்துவதே அதன் நோக்கமாக அமைய வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, அமைச்சர் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பொது அறிவிப்பு

சென்னை – 600 091, மடிப்பாக்கம், மடிப்பாக்கம் பிரதான சாலை, எண்.13–ஏ அன்ட் பி என்ற முகவரியில் வசிக்கும் எனது கட்சிக்காரர் திருமதி. மலர்கொடி, க/பெ. (லேட்) திரு. கே.ஜி.எம். பாண்டியன், அவர்கள் அவரது கணவர் திரு. கே.ஜி. எம். பாண்டியன் அவர்களுக்கு சொந்தமான குன்றத்தூர் தாலுகா மற்றும் மாவட்டம், அதனஞ்சேரி கிராமம், பட்டா எண்.54–ன்படி சர்வே எண்கள். 182/3, மற்றும் 166/3A, உப பிரிவு சர்வே எண். 182/1A1A பகுதி மற்றும் 166/3A1A1A1A1 பகுதி–ல் உள்ள 11,842 சதுர அடி காலி நிலம் தொடர்பான பத்திரம் மற்றும் ஜூன் 9, 1988 தேதியிட்ட ஆவண எண்கள்.1590 மற்றும் 1591/1988, சார் பதிவாளர் அலுவலகம், கூடுவாஞ்சேரியில் பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரத்தின் கீழ் அருகிலுள்ள நிலங்களையும் அவரது கணவர் கே.ஜி.எம். பாண்டியன் அவர்கள் பி. ஞானாம்பாள் மற்றும் மற்றவர்கள் மற்றும் எஸ்.ஏ. காஜா மொஹிதீன் மற்றும் மற்றவர்களிடம் இருந்து வாங்கினார். இந்த நிலையில், அவர் கூடுவாஞ்சேரி கிராமத்தில் உள்ள கூடுவாஞ்சேரி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றபோது, மேற்கூறப்பட்ட அசல் விற்பனைப் பத்திரங்கள் காணாமல் போய்விட்டன அல்லது தொலைந்துவிட்டன. கடும் முயற்சி செய்து தேடியும் மேற்கண்ட விற்பனை பத்திரங்களை அவரால் கண்டுபிடிக்கவில்லை. எனவே இந்த பொது அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய சொத்து தொடர்பான அசல் விற்பனை பத்திரங்கள் மீது ஏதேனும் பாத்தியதை, உரிமைகோரல் அல்லது ஆட்சேபனைகள் உள்ளவர்கள் இந்த அறிவிப்பு வெளியான தேதியில் இருந்து 15 நாட்களுக்குள் கீழ் கையொப்பமிட்டவரிடம் தெரிவிக்கவும்.

[ஆர். எட்வின் சாலமன்] வழக்கறிஞர்,
17, கிருஷ்ணசாமி தெரு,
பழவந்தாங்கல், சென்னை 600 114.

இடம்: சென்னை
நாள் :18.08.2023

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரராகிய சென்னை–23, அயனாவரம், அப்பாதுரை முதல் தெரு, கதவு எண்.22/36Aல் வசிக்கும் V.வெங்கடராவ் அவர்களின் மகளும், M.எத்திராஜன் அவர்களின் மனைவியுமாகிய V.நீலாவதி அவர்களுக்கு சொந்தமான திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர் கிராமம், சர்வே எண்கள் 98/2, 98/3, 98/4ல் அடங்கிய அன்னை இந்திரா நகர் அனெக்ஸ். III மனை பிரிவில் பிளாட் எண்.24 ஆன 3439 சதுரடி பரப்பளவு கொண்ட. சொத்தின் தாய் பத்திரம் ஆன, 22.9.1988 தேதியிட்ட பூவிருந்தவல்லி சார்பதிவாளர் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரயப் பத்திரம் ஆவண எண்.7692/1988 ஆவணத்தின் பக்கம் 3 வரி 1ல் தேதியானது 9.7.1986க்கு பதிலாக 9.7.1987 எனறும், பக்கம் 3 வரி 2ல் டாக்குமெண்ட் நெம்பர் 3679க்கு பதிலாக 3629 என்றும், தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தவற்றை திருத்தம் செய்யும் வகையில், மேற்படி கிரைய பத்திரத்தில் கண்டுள்ள கிரையத்தாரர்களான N.பாலசுப்பிரமணியம் 2. N,வெங்கடேசன் ஆகியவர்களை முயற்சிகள் எடுத்தும் கண்டறிய முடியவில்லை. ஆகவே இந்த பொது அறிவிப்பு கொடுத்த நாளிலிருந்து பத்து நாட்களுக்குள் மேற்படி கிரையதாரர்களை மேற்படி தவற்றை திருத்தம் செய்ய அறிவுறுத்தப்படுகிறது. தவறும் பட்சத்தில் மேற்படி எனது கட்சிக்காரர், மேற்படி சரியான ஆவண தேதி 9.7.1986 மற்றும் ஆவண எண் 3679 என்றும் ஆனதை உறுதிமொழி பத்திரம் மூலம் உறுதிப்படுத்தப்படும் என்பதை அறியவும்.

G.மோகனரங்கன்,B.Sc.B.L,
அட்வகேட்
No.17/21, அப்பாதுரை மெயின் தெரு, அயனாவரம்,
சென்னை–600 023
Cell: 9884075066

நியோஜின் பின்டெக் லிமிடெட்

CIN: L65910TN1988PLC131102

பதிவு அலுவலகம் : MIG 944, தரை தளம், டிஎன்எச்பி காலனி, 1வது மெயின் ரோடு, வேளச்சேரி, சென்னை, தமிழ்நாடு 600 042
கார்ப்பரேட் அலுவலகம் : நீல்கந்த் கார்ப்பரேட் ஐடி பார்க், 311/312, கிரோல் சாலை, வித்யாவிகார் (மே), மும்பை 400 086. Tel No: +91 22 62514646 | Email ID: niyogin.compliance@niyogin.in Website: www.niyogin.com

35வது வருடாந்திர பொதுக்கூட்டம், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் புத்தகம் மூடல் அறிவிப்பு

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் மீது பரிவர்த்தனை மேற்கொள்ள நியோஜின் பின்டெக் லிமிடெட்டின் (கம்பெனி) உறுப்பினர்களுக்கான **35வது வருடாந்திர பொதுக் கூட்டம் வியாழக்கிழமை, செப்டம்பர் 14, 2023 அன்று மாலை 4.00 மணிக்கு (இந்திய நேரப்படி)** காணொலி காட்சி மூலம் ('vc')/பிற ஆடியோ காட்சி முறை மூலம் ('OAVM') நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பொருந்தக்கூடிய விதிகள் ('சட்டம்') மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகத்தின் 8 ஏப்ரல், 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.14/2020, 13 ஏப்ரல், 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 17/2020, 05 மே, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 20/2020 மற்றும் இது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள், சமீபத்திய டிசம்பர் 28, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 10/2022 (இனி கூட்டாக 'எம்சிஏ சுற்றறிக்கைகள்' என குறிப்பிடப்படுகிறது) மற்றும் செக்யூரிட்டீஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா ('SEBI') (இனி கூட்டாக ' செபி சுற்றறிக்கைகள்' என குறிப்பிடப்படும்) வெளியிட்டுள்ள மே 12, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண் SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79, ஜனவரி 15, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 மே 13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62 மற்றும் ஜனவரி 05, 2023 தேதியிட்ட ற்றறிக்கை எண்.SEBI/HO/CFD/PoD-2/P/CIR/2023/4 மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் ("எம்சிஏ") மற்றும்ரெசெபி அவ்வப்போது வெளியிடும் அனைத்து தொடர்புடைய சுற்றறிக்கைகள் (இனி கூட்டாக 'தொடர்புடைய சுற்றறிக்கைகள்' என்று குறிப்பிடப்படுகின்றன) ஆகியவற்றுக்கு இணங்க, கம்பெனி/பதிவாளர் மற்றும் பங்குமாற்று முகவரான லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் வைப்பு பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2022-23–ம் நிதியாண்டுக்கான ஒருங்கிணைந்த வருடாந்திர அறிக்கை, ஆகியவை ஆகஸ்ட் 21, 2023 திங்கட்கிழமை அன்று மின்னஞ்சல் மூலம் மின்னணு முறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கம்பெனியின் பதிவு அலுவலகம் : MIG 944, தரை தளம், டிஎன்எச்பி காலனி, 1வது மெயின் ரோடு, வேளச்சேரி, சென்னை, தமிழ்நாடு 600 042–ல் வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள், கம்பெனிகள் சட்டம், 2013 ('சட்டம்') பிரிவு 103–ன் படி குறைந்தபட்ச நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.

கம்பெனியின் niyogin.compliance@niyogin.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் ஒரு உறுப்பினர் வருடாந்திர அறிக்கையின் நகலைக் கோரலாம்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் 2022–23 நிதி ஆண்டுக்கான ஒருங்கிணைந்த வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.niyogin.com மற்றும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட்டின் (NSDL) www.evoting.nsdl.com மற்றும் பிஎஸ்இ லிமிடெட்டின் www.bseindia.comல் கிடைக்கும் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளவும்.

கம்பெனிகள் சட்டம், 2013ன் பிரிவு 108ன் விதிமுறைகளுக்கு இணங்க, கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014ன் விதி 20ன்படி, அவ்வப்போது திருத்தப்பட்டு, செபியின் 44வது கட்டுப்பாடு (பட்டியலிடும் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 மற்றும் இன்ஸ்டிடியூட் ஆஃப் கம்பெனி செக்ரட்டரீஸ் ஆஃப் இந்தியா (ஐசிஎஸ்ஐ) வழங்கிய பொதுக் கூட்டங்கள் குறித்த செயலக தரநிலைகள் ஆகியவற்றுக்கு இணங்க, உறுப்பினர்கள் என்எஸ்டிஎல் வழங்கும் மின்னணு வாக்குப்பதிவு முறையைப் பயன்படுத்தி (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு) வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களிலும் வாக்களிக்கலாம். வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு முந்தைய தொலைதூர மின்னணு வாக்களிப்பு/ வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு தொடர்பான விரிவான நடைமுறை வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பு எண்.23–ல் வழங்கப்பட்டுள்ளது.

கட்ஆப் தேதியான செப்டம்பர் 07, 2023ன்படி, காகித வடிவத்தில் அல்லது மின்னணு வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு வாக்களிப்பு அல்லது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிப்பதன் மூலம் மின்னணு முறையில் வாக்களிக்க உரிமை உண்டு. வாக்களிக்கும் உரிமையானது கட்ஆப் தேதியின்படி கம்பெனியின் செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்கு மூலதனத்தில் அவர்கள் வைத்திருக்கும் ஈக்விட்டி பங்குகளின் விகிதத்தில் இருக்கும். வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு முன்பு தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை இல்லை. இருப்பினும், தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்காத உறுப்பினர்களுக்கு வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்குப்பதிவு வசதி கிடைக்கும். ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்த உறுப்பினர், அதை மீண்டும் மாற்றி வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு விவரங்கள் பின்வருமாறு:

a	**மின்னணு வாக்குப்பதிவு நிகழ்ச்சி எண். (EVEN)**	125323
b	**வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு அனுப்பும் பணி நிறைவுத் தேதி**	திங்கட்கிழமை, ஆகஸ்ட் 21, 2023
c	**வருடாந்திர அறிக்கையை பெற தகுதி உள்ள நபர்களை தீர்மானிக்கும் கட் ஆப் தேதி**	வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 18, 2023
d	**தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிப்பதன் மூலம் வாக்களிப்பதற்கான உறுப்பினர்களின் தகுதியை தீர்மானிப்பதற் கான கட்ஆஃப் தேதி**	வியாழக்கிழமை செப்டம்பர் 07, 2023
e	**மின்னணு முறையில் வாக்களிப்பு துவங்கும் நாள் மற்றும் நேரம்**	திங்கட்கிழமை செப்டம்பர் 11, 2023 அன்று காலை 9.00 மணி
f	**மின்னணு முறையில் வாக்களிக்க கடைசி நாள் மற்றும் நேரம்**	புதன்கிழமை செப்டம்பர் 13, 2023 அன்று மாலை 5.00 மணி

மேற்கூறிய தேதி மற்றும் நேரத்திற்கு அப்பால் தொலைதூர மின்னணு–வாக்களிப்பு அனுமதிக்கப்படாது மேலும் மேற்கூறிய காலம் முடிவடைந்தவுடன் தொலைதூர மின்னணு–வாக்களிப்பு தொகுதி உடனடியாக NSDL–ஆல் முடக்கப்படும்.

காகித வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் அல்லது மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்கள் மற்றும் மின்னஞ்சல் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு கம்பெனியின் பங்குகளை வாங்கி கம்பெனியின் உறுப்பினராகும் நபர்கள் மற்றும் கட்ஆப் தேதி அதாவது செப்டம்பர் 07, 2023 அன்று பங்குகளை வைத்திருக்கும் நபர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கும், தொலைதூர மின்னணு–வாக்களிப்பு மூலம் வாக்களிப்பதற்கும் தங்கள் பயனர் முகவரி மற்றும் கடவுச்சொல்லைப் பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய செயல்முறை/நடைமுறைகளுக்கு வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பைப் பார்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மின்னணு வழிகளில் வாக்களிப்பது தொடர்பான ஏதேனும் கேள்விகள் இருந்தால் www.evoting.nsdl.com இன் பதிவிறக்கப் பிரிவில் கிடைக்கும் உறுப்பினர்களுக்காக அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் மின்னணு வாக்குப்பதிவு பயனர் கையேட்டைப் பார்க்கவும் அல்லது 022 – 48867000 மற்றும் 022 – 24997000 என்ற எண்ணிகளில் தொடர்பு கொள்ளவும் அல்லது திரு. சாகர் எஸ். குததே அவர்களை evoting@nsdl.co.inல் தொடர்பு கொள்ளலாம்.

வைப்பாளர் மூலம் உள்நுழைவது தொடர்பான தொழில்நுட்ப பிரச்சினைகளுக்கு மின்னணு முறையில் பத்திரங்களை வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர்கள் NSDL மற்றும் CDSL–ன் உதவிப் பிரிவை பார்வையிடவும்.

உள்நுழைவு வகை	**உதவி மைய விவரங்கள்**
NSDL உடன் மின்னணு வடிவில் பத்திரங்களை வைத்துள்ள தனிநபர் பங்குதாரர்கள்	உள்நுழைவில் ஏதேனும் தொழில்நுட்ப சிக்கலை எதிர்கொள்ளும் உறுப்பினர்கள் evoting@nsdl.co.in–ல் கோரிக்கையை அனுப்புவதன் மூலம் NSDL உதவி மையத்தைத் தொடர்புகொள்ளலாம் அல்லது 022 48867000 மற்றும் 022 24997000ஐ தொடர்பு கொள்ளவும்.
CDSL உடன் மின்னணு வடிவில் பத்திரங்களை வைத்துள்ள தனிநபர் பங்குதாரர்கள்	உள்நுழைவில் ஏதேனும் தொழில்நுட்ப சிக்கலை எதிர்கொள்ளும் உறுப்பினர்கள் helpdesk.evoting@cdslindia.com–ல் கோரிக்கையை அனுப்புவதன் மூலம் CDSL உதவி மையத்தைத் தொடர்புகொள்ளலாம் அல்லது 1800 22 55 33 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மின்னணு வாக்களிப்பை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஆராய்வதற்கான ஆய்வாளராக திரு. மிதேஷ் ஜே. ஷா (FCS 10070), மெசர்ஸ் மிதேஷ் ஜெ. ஷா அன்ட் அசோசியேட்ஸ், கம்பெனி செயலாளர்கள் அவர்களை இயக்குனர்கள் குழு நியமித்துள்ளது.

மேலும் சட்டத்தின் பிரிவு 91 மற்றும் கம்பெனிகள் (நிர்வாகம் மற்றும் மேலாண்மை) விதிகள், 2014 விதி 10(1) மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 42ன் கீழ் 35வது வருடாந்திர பொதுக் கூட்டத்தையொட்டி உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 08, 2023 முதல் வியாழக்கிழமை, செப்டம்பர் 14, 2023 வரை (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும்.

நியோஜின் பின்டெக் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
நேகா அகர்வால்
கம்பெனி செயலாளர் & இணக்க அதிகாரி

இடம் : மும்பை
தேதி : ஆகஸ்ட் 21, 2023

இந்த் பாங்க் ஹவுசிங் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 3 வது தளம், 480, கிவ்ராஜ் காம்ப்ளக்ஸ் - 1,
அண்ணா சாலை, நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண். 2432 9235
CIN No. : L65922TN1991PLC020219 Email: indhouse@indbankhousing.com

32வது ஆண்டு பொதுக்கூட்டம் அறிவிப்பு

வருடாந்திர பொதுக்கூட்டத்தை நடத்த கம்பெனிகள் சட்டம் 2013ன் பொருந்தக்கூடிய பிரிவுகள் மற்றும் அதன் கீழுள்ள விதிகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிப்படுத்துதல் தேவைகள்) கட்டுப்பாடுகள், 2015 மற்றும் கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகம் மற்றும் செக்யூரிடீஸ் எக்ஸ்சேஞ் போர்டு ஆப் இந்தியாவினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் படி, கம்பெனியின் முப்பத்தி இரண்டாம் வருடாந்திர பொதுக்கூட்டம் ("32nd AGM") வியாழக்கிழமை, 14th செப்டம்பர், 2023 அன்று மதியம் 2.30 (IST) மணிக்கு காணொளி காட்சி ("VC") / பிற ஒலி ஒளி சாதனங்கள் ("OAVM") மூலமாக கூட்டப்படுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனி அல்லது அவர்களது சம்பந்தப்பட்ட டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் ("டெபாசிட்டரி") மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் 32வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 31, மார்ச் 2023-ல் முடிந்த ஆண்டுக்கான நிதி அறிக்கைகள் ("ஆண்டறிக்கை") உள்பட 2022-23 ஆண்டுக்கான ஆண்டறிக்கை ஆகியவை மின்னஞ்சல் மூலம் மட்டுமே அனுப்பப்படும். இந்த பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கை நிறுவனத்தின் இணையதளமான www.indbankhousing.comல் உள்ளது. மின்னணு பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கையை அனுப்பும் பணியானது 21.08.2023 அன்று அல்லது அதற்கு முன்பாக நிறைவடையும்.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கை 2022-23ஐ மின்னணு முறையில் பெற, காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் மற்றும் கம்பெனியிடம் மின்னஞ்சல் முகவரிகள் / மொபைல் எண்களை இதுவரை பதிவு செய்யாத உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் மொபைல் எண்ணை பதிவு செய்வதற்காக 05.09.2023க்கு முன் https://investors.cameoindia.com ஐப் பார்வையிடலாம் அல்லது தங்கள் விவரங்களை agm@cameoindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யலாம். முறையான சரிபார்ப்பிற்குப் பிறகு, வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கும் வாக்களிப்பதற்கும் பதிவு செய்த மின்னஞ்சல் முகவரிக்கு உள்நுழைவு சான்றுகளை கம்பெனி / ஆர்.டி.ஏ. அனுப்பும்.

நிறுவன சட்டம் 2013ன் பிரிவு 91ன்படி, நிறுவனத்தின் உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்குமாற்றல் பதிவேடுகள் 08.09.2023 முதல் 14.09.2023 (இரண்டு நாட்களும் உட்பட) வரை மூடப்பட்டிருக்கும் என்பதும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிறுவன (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 20 (அவ்வப்போது ஏற்படும் திருத்தங்களுக்கு ஏற்ப) உடன் இணைந்து நிறுவன சட்டம் 2013ன் பிரிவு 108ன்படி மற்றும் செபி(பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015ன் கட்டுப்பாடு 44ன் கீழ் உறுப்பினர்களுக்கு தங்கள் மின்னணு வாக்குகளை (தொலை வாக்களிப்பு மூலம்) பதிவு செய்யும் வசதி வழங்கப்படுகிறது. நிறுவனம் அதற்காக சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL)ன் சேவையைப் பெற்றுள்ளது.

கீழ்க்கண்டவை உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது :-

1. பொதுக்கூட்ட அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ள வர்த்தகத்திற்கான பரிவர்த்தனையை மின்னணு மூலமாகவும் வாக்குப் பதிவு செய்யலாம். மின்னணு மூலமாக வாக்குப் பதிவு செய்வது பற்றிய குறிப்புகள் பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன.
2. தொலை மின்னணு வாக்குப் பதிவானது திங்கட்கிழமை, செப்டம்பர் 11, 2023 அன்று காலை 9.00 மணிக்குத் துவங்கி புதன்கிழமை, செப்டம்பர் 13, 2023 அன்று மாலை 5.00 மணிக்கு நிறைவடையும். இந்த இடைப்பட்ட காலத்தில் உறுப்பினர்கள் தங்கள் மின்னணு வாக்குகளை பதிவு செய்யலாம். அதற்குப் பின்னர் தொலை வாக்குப் பதிவு CDSL-ஆல் செயலிழப்பு செய்யப்பட்டுவிடும்.
3. பொதுக்கூட்ட மின்னணு வாக்குப் பதிவிற்கான தகுதியை நிர்ணயம் செய்வதற்கான கடைசி தேதி செப்டம்பர் 07, 2023 வியாழக்கிழமையாகும்.
4. பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்ட பின் நிறுவனத்தின் பங்குகளை வாங்கி நிறுவனத்தின் உறுப்பினராகும் எந்த ஒரு நபரும் அதாவது கெடு தேதியான வியாழக்கிழமை, செப்டம்பர் 07, 2023க்குள் பங்குகளை வைத்திருந்து மின்னணு மூலம் அவர் வாக்குப் பதிவு செய்ய விரும்பினால், லாக்-இன் விவரங்களைப் பெற RTA, M/s. கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்டை அணுகலாம். உறுப்பினர்கள் ஏற்கனவே தொலை மின்னணு வாக்குப்பதிவு செய்யும் நோக்கத்துடன் CDSLல் பதிவு செய்திருந்தால் தற்போதைய யூஸர் ID மற்றும் பாஸ்வேர்டு ஆகியவற்றைப் பயன்படுத்தியே வாக்குப் பதிவு செய்யலாம்.

மின்னணு வாக்குப் பதிவு குறித்த விசாரணைகளுக்கு, www.evotingindia.com என்பதில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு கையேட்டில் உள்ள அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பகுதியை (FAQ)ஐப் பார்க்கவும் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு இமெயில் அனுப்பவும். மின்னணு வாக்குப் பதிவு குறித்த விசாரணைகள் / புகார்களுக்கு உறுப்பினர்கள், சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், 17வது தளம், PJ டவர்ஸ், தலால் தெரு, மும்பை 400 001 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். ஹெல்ப்டெஸ்க்: 1800-200-5533 இமெயில்: helpdesk.evoting@cdslindia.com அல்லது RTA, M/s. கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட். இமெயில் murali@cameoindia.com அல்லது நிறுவன செயலர் இமெயில்: indhouse@indbankhousing.comலும் தொடர்பு கொள்ளலாம்.

இயக்குனர் குழவின் ஆணைக்கு இணங்க
இந்த் பாங்க் ஹவுசிங் லிமிடெட்டுக்காக
CS. ஆகான்ச்ச வியாஸ்
நிறுவன செயலர் மற்றும் இணக்க அதிகாரி

தேதி: 21.08.2023
இடம் : சென்னை

அபான் ஆப்ஷோர் லிமிடெட்

aban®

பதிவு அலுவலகம்: ''ஜனப்ரியா கிரஸ்ட்'', 113, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை–600 008.
Website: www.abanoffshore.com; Tel No.044-49060606; Fax:044-28195527 CIN:L01119TN1986PLC013473

பொது அறிவிப்பு

கம்பெனி பங்குதாரர்களின் 37வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) திங்கட்கிழமை, 25 செப்டம்பர் 2023 அன்று இந்திய நேரப்படி காலை 10.15 மணிக்கு காணொளி காட்சி ("VC")/பிற ஒளி ஒலி சாதனங்கள் ("OAVM") மூலமாக நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

உலகளாவிய COVID–19 தொற்றுநோயால் எழும் நிலைமையைக் கருத்தில் கொண்டு, கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் வழங்கப்பட்ட (எம்சிஏ) ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 17/2020, மே 05, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 20/2020 மற்றும் ஜனவரி 15, 2021 தேதியிட்ட செபி சுற்றறிக்கை குறிப்பு எண் SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11னால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களின் கம்பெனியின் வருடாந்திர பொதுக்கூட்டம் காணொளி காட்சி ("VC")/பிற ஒளி ஒலி சாதனங்கள் ("OAVM") மூலமாக நடைபெறுகிறது ஆகவே, உறுப்பினர்கள் VC/OAVM மூலம் நடைபெற உள்ள வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்.

12 மே 2020 தேதியிட்ட செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா வழங்கிய சுற்றறிக்கை தளர்வுக்கு இணங்க, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2022–23 நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை 18 ஆகஸ்ட் 2023 அன்று அலுவல் நேரம் முடிவதற்குள் நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL)/சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL)டிலிருந்து பெறப்பட்ட பயனுள்ள உரிமையாளர்கள் பட்டியல்/உறுப்பினர் பதிவேட்டில் கண்டுள்ள பெயர்களில் உள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் 21 ஆகஸ்ட் 2023 அன்று அன்று மின்னணு வடிவத்தில் அனுப்பப்பட்டுள்ளது.வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2022–23 நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.abanoffshore.com, நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) இணையதளம் www.evoting.nsdl.com, பிஎஸ்இ லிமிடெட் இணையதளம் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட் இணையதளம் www.nseindia.comல் கிடைக்கும் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். வருடாந்திர பொதுக்கூட்டத்தில் சேருவதற்கான வழிமுறைகள் அறிவிப்பில் அளிக்கப்பட்டுள்ளன. VC/OAVM மூலம் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள், கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 103ன் கீழ் கோரத்தை கணக்கிடுவதற்கான நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108, கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன்படி, உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிப்பதற்காக நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) மூலமாக வணிகத்தை பரிவர்த்தனை செய்வதற்கு மின்னணு வாக்குப்பதிவு (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு)வசதியை கம்பெனி அளிக்கிறது. கூடுதலாக, மின்னணு முறையின் மூலம் வாக்களிப்பதற்கான வசதியும் கூட்டத்தின்போது கிடைக்கும் மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் ஏற்கனவே வாக்களிக்காமல் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள் கூட்டத்தில் வாக்களிக்க உரிமை உள்ளது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவிற்கான விரிவான நடைமுறைகள் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பதற்கு கட் ஆப் தேதியான 18 செப்டம்பர் 2023 அன்று உறுப்பினர்கள் பதிவேடு/டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயனுள்ள உரிமையாளர் பட்டியலில் கண்டுள்ள பெயர்களில் உள்ள உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு/ மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கும் வசதி உள்ளது. கட் ஆப் தேதியான 18 செப்டம்பர் 2023க்கு முன்பாக ஆனால் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பிய பிறகு கம்பெனியின் பங்குகளை பெற்று உறுப்பினரான நபர் evoting.nsdl.comக்கு ஒரு கோரிக்கை அனுப்பி லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம் அல்லது பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், ''சுப்ரமணியன் பில்டிங்'', எண். 1 கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை–600 002 Phone : +91 044 28460390 (5 lines); Fax :+91 044 28460129; Email : investor@cameoindia.comல் தொடர்பு கொள்ளலாம்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வெள்ளிக்கிழமை, 22 செப்டம்பர் 2023 அன்று காலை 9.00 மணிக்கு தொடங்கி ஞாயிற்றுக்கிழமை, 24 செப்டம்பர் 2023 அன்று மாலை 5.00 மணிக்கு முடிவடைகிறது.

மேற்சொன்ன தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் **(ஞாயிற்றுக்கிழமை, 24 செப்டம்பர் 2023 அன்று மாலை 5.00 மணி)** மின்னணு முறையில் வாக்களிக்க முடியாது என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அதன்பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவை NSDL நிறுத்திவிடும்.

வருடாந்திர பொதுக்கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு/வாக்குப்பதிவிற்காக M/s. ஜி. ராமச்சந்திரன் அண்ட் அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர், சென்னை அவர்கள் ஆராய்வாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்கலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை கிடையாது.

மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை அந்தந்த டெபாசிட் பங்கேற்பாளர்களுடன் பதிவு செய்யுமாறு கோரப்படுகிறார்கள் மற்றும் காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர், கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்டின் investor@cameoindia.comக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பாக ஏதேனும் சந்தேகம்/குறைகள் இருப்பின் அது குறித்து Ms. பல்லவி மத்ரே, மேலாளர், NSDL, 4வது மாடி, 'ஏ' விங், டிரேட் வேர்ல்ட், கமலா மில்ஸ் காம்பவுண்ட், சேனாபதி பாபட் மார்க், லோயர். பரேல், மும்பை 400 013. மின்னஞ்சல்: evoting@nsdl.co.in /pallavid@nsdl.co.in, தொலைபேசி: 91 22 24994545 /1800–222–990ல் தொடர்பு கொள்ளலாம்.

(குழுவின் ஆணைப்படி)
S.N. பாலாஜி
உதவி பொது மேலாளர் (சட்டம்) மற்றும் செயலாளர்

இடம்: சென்னை
தேதி: 21.08.2023

CHANGE OF NAME

I, Alamu Arunachalam W/O Alagunarayanan, R/o No. 6/569, Chinnaiya Nayakkan Street, East Gate, Thanjavur, Tamil Nadu- 613001. I have changed the name of my minor Son Adhithya Narrayanan aged about 5 Years and He shall hereafter be known as Adhithya Arun

---

CHANGE OF NAME

I, Indra Alias Indra Raman Alias Indira, W/O Raman R/o 13,G-4, Lokesh Homes, Ramasamy Avenue, Vannandurai, Adyar, Chennai, Tamil Nadu-600020. have changed my name and shall hereafter be Known as Indira Raman

---

PUBLIC NOTICE

It is informed to the general public that our client Mrs.Shamna K P, D/o. K Ravindran, residing at Asset Elvira, Flat no: 114, Muthanallur, Sarjapur Hobli, Anekal Taluk, Gopasandra village, Bengaluru, Karnataka 560099, intends to purchase the property covered in SURVEY NUMBER: 140/4, of Kodiyalam village, of Hosur Taluk, Krishnagiri District, Tamil Nadu converted into "VGP BHARATH TOWN", layout plots Approved in L.P/D.T.C.P. No. 352/94 situated in PLOT NO. 329, from its original owner N. Shabarish, residing at Hosur Taluk, Krishnagiri District, Tamil Nadu - 635103.

Any person claiming to have any manner of right, title, claim or interest in the above-said property is hereby called upon to notify the undersigned with supporting documents thereof within 7 (Seven) days from the date of this notice, failing which, thereafter, our client shall proceed for purchase of the above said property, on the basis that there are no any claims of whatsoever nature with regard to the above said property or any part thereof nor any objections for purchase by our client.

Date: 22nd August 2023
Place: Kodiyalam
Jayaprakash V
Advocate & Notary Public,
Govt of India (Hosur). Phone: 9741846769